**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | Sessions Case No.163 of 2019 |
| Miscellaneous | : | |
| Preliminary register | : | |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | : | Prosecution | : PW- 11 |
| | | Defence | : |
| | : | Court | : |

| | |
|---|---|
| Name | : Dr. Arulrama Krishnan |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12st day of December 2024.**

முதல் விசாரணை:

நான் தற்போது ஊத்தங்கரை ஜெனார்தனம் நினைவு மருத்துவமனையில் மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். 10.04.2019 அன்று நான் மணிப்பால் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணியில் இருந்த போது அன்று அதிகாலை 3.00 மணிக்கு 26 வயதுடைய பெருமாள் என்பவரை அவரது தாய் அலமேலு என்பவர் அழைத்து வந்தார். விசாரித்த போது 09.04.2019 அன்று இரவு 11.00 மணி அளவில் பெருமாள் என்பவரை அவரது மாமா மகன் ஒருவர் பெரியதள்ளபாடியில் உள்ள தனது வீட்டில் வைத்து கத்தியால் தாக்கியதாகவும் அதற்கு ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் முதல் உதவி செய்ததாகவும் பிறகு தர்மபுரி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும். மேல் சிகிச்சைக்காகவும் சேலம் மணிப்பால் மருத்துவனைக்கு வந்ததாகவும் கூறினார். அவரை பரிசோதித்த போது கீழ் கண்ட காயங்கள் இருந்தது. காயம் 1. வலது புற கீழ் கண் இமையில் 3X3X1 cm அளவில் கிழிந்த கயமும். காயம் 2. வலது புற தோல்பட்டையில் 2X2X2 cm அளவில் கிழிந்த காயமும், காயம் 3. இடது மார்பில் 2X2X2 cm அளவில் தையல் போடப்பட்ட கிழிந்த காயமும் இருந்தது. காயம் 4. வலது புற பின் வயிற்று பகுதியில் 3X2X3 cm அளவில் கிழிந்த காயம், காயம் 5. தொப்பிழுக்கு இடது புறமாக 5 cm அளவில் கிழிந்த காயமும் அதன் வழியாக 10 cm நீளம்முள்ள சிறுகுடல் வெளியே வந்து இருந்தது. காயம்.6 இடது புற மேல் வயிற்று பகுதியில் 3X3X2 cm அளவில் கிழிந்த காயமும், வலது புற மேல்வயிற்று பகுதியில் 3X3X2 cm கிழிந்த காயமும் இருந்தது. காயம் 7. இடது புற காலில் 4X3X2 cm அளவில் கிழிந்த காயமும். இடது புற பிண்ணங்காலில் 3X3X3 cm அளவில் கிழிந்த காயம் இருந்தது. காயம். 8. சிறுகுடலில் 5 இடங்களில் ஓட்டை இருந்தது. மேற்கூரிய நபரை உள்நோய்யாளியாக அனுமதித்து 10.04.2019 முதல் 17.04.2019 வரை சிகிச்சை அளிக்கப்பட்டது. 10.04.2019 அன்றே அவருக்கு வயிற்று பகுதியை அறுவை சிகிச்சை செய்து பார்த்த போது சிறுகுடலில் 5 இடங்களில் ஓட்டை இருந்தது. வயிற்று பகுதியில் 750 ML அளவில் இரத்தம் தேங்கி இருந்தது. இரத்தக்கசிவு இருந்தது. சிறுகுடல் அழுகி இருந்தது. அழுகிய சிறுகுடல் வெட்டப்பட்டு இணைக்கப்பட்டது. கிழிந்த காயங்களுக்கு தையல் போடப்பட்டது. மேற்கண்ட காயங்களில் காயம் 5 மற்றும் 8 காயங்கள் கொடுங்காயம் என்றும் மற்ற காயங்கள் சாதரண காயங்கள் என்றும் சான்று வழங்கினேன். அந்த சான்று ஆ.சா.ஆ. 14. இது சம்மந்தமாக காவல் ஆய்வாலர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்:

காயம்பட்ட பெருமாள் மருத்துவ மனைக்கு வரும்போது பேசும் நிலையில் இருந்தார் என்றால் சரிதான். ஊத்தங்கரை அரசு மருத்துவமனை மருத்துவ விபத்து பதிவேடை பார்த்தேன் என்றால் சரிதான். அதில் அந்த விபத்து பதிவேட்டில் அடையாளம் தெரியாத நபரால் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த விபத்து பதிவேட்டில் மாமா மகனால் தாக்கப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் கொடுத்த விபத்து பதிவேட்டிலும் தாக்கியவர் பெயரை

குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தர்மபுரியில் எந்த தனியார் மருத்துவமனையில் சிசிச்சை பெற்றார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பெருமாள் இரவு நேரத்தில் வேகமாக சென்று கீழே விழும்போது கூர்மையான பகுதியில் குத்தினால் மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை. போலீசார் கேட்டுக்கொண்டதால் பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை**:** **இல்லை.**

ஒம்/- திருமதி. G.கலைவாணி, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, சார்பு நீதிமன்றம்,
ஊத்தங்கரை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

Calendar :
Miscellaneous :
Preliminary register :
Sessions :

Sessions Case No. of 20

Deposition of witness for :
:

Prosecution : PW-
Defence :
Court :

Name :
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12st day of December 2024.**

முதல் விசாரணை:

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்:

**மறு விசாரணை: இல்லை.**